**31.10.2018**

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் நகராட்சிக்கு சொந்தமான அனிமூர் உரக்கிடங்கில் இயற்கை உரம் தயாரிக்கும் பணிக்கு பணி செய்யும் தாழம்பூ மகளிர் குழுவினருக்கு 2017–2018ம் ஆண்டிற்கு மாவட்ட அரசிதழ் எண்.4, நாள்.25.07.2017 அன்று வெளியிடப்பட்டுள்ள தொகை நாள் ஒன்றுக்கு ரூ.285/– என்ற விலை விகிதத்தில் ஊதியம் வழங்க அக்டோபர் 2018, நவம்பர் 2018, டிசம்பர் 2018 ஆகிய மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் செலவினத் தொகை ரூ.2,20,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத் தொகை ரூ.2,20,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரத்தை) பொது நிதியில் இருந்து வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.500/13/எச்1)

**பொருள் எண்.2**

கீழ்க்கண்ட பணிக்கு 17.10.2018 அன்று நடைபெற்ற Expression of interest (EOI)இல் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | EOI இன் படி Automatic Vending Machine நிறுவ செலவிடும் தொகை ரூ. |
|---|---|---|
| வார்டு எண்.1, சீத்தாராம்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளி பின்புறம் 1 இடத்தில் சமூகநல குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி ( 1000 litre/ hour Capacity) மற்றும் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல் | 1. M/s.Dharana Infrastructure Projects Private Limited, Chennai, | ரூ.1975000/– |

**அலுவலக குறிப்பு:**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு M/s.Dharana , Infrastructure Projects Private Limited, Chennai நிறுவனத்திற்கு ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு பணி உத்திரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.4200/2018/இ1)

**<u>பொருள் எண்.3</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15, சூரியம்பாளையம் பகுதிக்கு குடிநீர் ஆனங்கூர் செல்லும் சாலை வழியாக கொண்டு செல்லப்படுகிறது. தற்போது நெடுஞ்சாலை துறை மூலம் சாலையை அகலப்படுத்தும் பணி மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் சாலையில் உள்ள குடிநீர் குழாய் முழுவதும் பழுது ஏற்பட்டுள்ளது. குடிநீர் சப்ளை செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஆனங்கூர் சாலையின் ஓரம் புதிய 4" PVC Pipe சுமார் 530 மீட்டர் அமைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.75 இலட்சத்திற்கு தனி அலவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 4950 /2018/இ1)

**<u>பொருள் எண்.4</u>**

இந்நகராட்சியில் பணிபுரியும் தகுதி வாய்ந்த நபர்களுக்கு 2018–2019ம் ஆண்டு சீருடை மற்றும் தையற்கூலி வழங்க வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 2018–2019ம் ஆண்டு சீருடை வழங்க ரூ.4.00 இலட்சத்தை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும், ஈரோடு வசந்தம் கோ ஆப் டெக்ஸ் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 4677 /2018/எச்1)

**<u>பொருள் எண்.5</u>**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட 33 வார்டு பகுதிகளில் உள்ள தெரு நாய்களால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு மற்றும் நோய் பரவுவதற்கு ஏதுவாக இருப்பதால் திருச்செங்கோடு கால்நடை மருத்துவரது குறிப்பின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பரோபரியாய் சுற்றித்திரியும் 626 நாய்களுக்கு கருத்தடை செய்யவும், வெறிநாய் கடி தடுப்பூசி

போடவும், மேலும் G.O(D) No.181 MAWS Dt.05.04.2013ல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி ஒரு நாய்க்கு ரூ.700/—வீதம் 626 நாய்களுக்கு தடுப்பூசி மற்றும் கருத்தடை சிகிச்சை செய்ய தோராய செலவினத் தொகை ரூ.4.40 ஆயிரத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 626 நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை செய்யவும் மற்றும் தடுப்பூசி போடவும் ஆகும் செலவித் தொகை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.11248/12/எச்1)